**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF DISTRICT MUNCIF CUM JUDICIAL MAGISTRATE, KODAVASAL**

| | | |
|---|---|---|
| Case No. | : | C.C NO.142/2025 |
| Deposition of witness | : | P.W.8 |
| List of witness | | L.W.8 |
| Name | : | மணிவேலன் |
| Father's /Husband Name | : | தமோதரன் |
| Village | : | செம்போடை |
| Taluk | : | வேதாரண்யம் |
| Age | : | 29 |
| Occupation | : | அரசு மருத்துவர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 9th day April 2026.
Accused present.

**முதல் விசாரணை**

நான் தற்போது திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவில் அவசர சிகிச்சை மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். நான் மேற்படி மருத்துவமனையில் கடந்த 16.06.2025 ம் தேதி அன்று நான் அலுவலில் இருந்தபோது இரவு 08.38 மணியளவில் 52 வயதுடைய பன்னீர்செல்வம் என்பவரை அவரது மனைவி கலா என்பவர் சிகிச்சைக்காக அழைத்து வந்த நபரை விசாரித்தபோது அன்றைய தினமே மாலை 05.00 மணியளவில் கூந்தலூரில் தெரிந்த ஒரு பெண்மனி அரிவாளால் தாக்கியதாக கூறினார். பின்னர் மேற்படி காயம்பட்ட நபரை நான் பரிசோதித்த வகையில் அவர் சுய நினைவுடன் இருந்தார். இருதய துடிப்பு, நுரையீரல் ஆகியவைகள் சீராக இருந்தது. பின்னர் அவரது இடது முன் தலை பகுதியில் 4 x 0.5x0.5 செ.மீ அளவில் தையல் போடப்பட்டிருந்தது. மேற்படி அனைத்தையும் நான் விபத்து பதிவேட்டில் பதிவுசெய்துகொண்டு காயம்பட்ட நபரை உள்நோயாளியாக சிகிச்சையில் அனுமதித்தேன். **(திருவாரூர் அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனையில் வழங்கப்பட்ட விபத்து பதிவேடு அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

மேலும் உள்நோயாளியாக சிகிச்சையிலிருந்த பன்னீர் செல்வம் என்பவர்க்கு சிகிச்சையளித்தும் மருத்துவ சட்ட கருத்துரையை மருத்துவர் A.S. மோகன்ராஜ் என்பவர் சான்று வழங்கயுள்ளார். **(மருத்துவ சட்ட கருத்துரை அ.சா.ஆ. 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** மேற்படி

கருத்துரையில் காயம்பட்ட நபருக்கு ஏற்பட்ட காயமானது சொற்ப காயம் என்று சான்று வழங்கியுள்ளார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>** :-

காயம்பட்ட நபர் ஒரு கூர்மையான பொருளில் இடித்து காயம் ஏற்பட்டால் மேற்படி காயமானது ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் காயம்பட்ட நபர் நன்னிலம் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று தையல் போட்டு வந்ததால் அதைபற்றி கூற இயலாது. காயத்தின் அளவையும் காயத்தின் தன்மையும் குறித்து சொல்ல இயலாது என்றால் சரிதான். விபத்து பதிவேட்டில் பெயர் எதுவும் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை.

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.04.09 18:40:12 +0530

`

District Munsif -Cum-
Judicial Magistrate,
Kodavasal.